**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மணப்பாறை.</u>**
**முன்னிலை: திரு. இரா. அசோக்குமார் B.Com, B.L .,**
**நீதித்துறை நடுவர், மணப்பாறை**
**2026-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01-ம் நாள் சனிக்கிழமை**
**<u>ஆண்டு பட்டிகை வழக்கு எண்.28/2024</u>**
**(CNR NO. TNTP10-000910-2024)**

**<u>சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 ம் தேதியிட்ட</u>**
**<u>R.O.C.No.814/2020/RG/F1 ன் படி வழக்கின் சுருக்கம்</u>**

| | |
|---|---|
| குற்றமுறையீடுபவர் | அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்<br>வையம்பட்டி காவல் நிலையம்<br>குற்ற எண்.516/2023 |
| குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகள்: | 1. ஜார்ஜ் ஸ்டீபன் ராஜ்,<br>த/பெ. சேசுராஜ் |
| குற்றப்பிரிவு | ச/பி. 294(b), 326 IPC |
| வனையப்பட்டது | ச/பி.294(b), 326 IPC |
| தீர்மானம் | **முடிவாக, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 326 IPC-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவர் குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 248(i)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.** |

| குற்றம் சாட்டப்பட்டவர்கள் விபரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | த.பெ. / க.பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
| ஜார்ஜ் ஸ்டீபன் | சேசுராஜ் | கிறித்துவர் | கூலி | புதுப்பட்டி, மலையடிப்பட்டி அஞ்சல், மணப்பாறை வட்டம், திருச்சி மாவட்டம். | 34/ 2023 |

| தேதி விவரங்கள்:– | | |
|---|---|---|
| குற்ற நிகழ்வு நாள் | : | 20.11.2023 |
| புகார் கொடுத்த நாள் | : | 23.11.2023 |
| எதிரியை கைது செய்த நாள் | : | 26.11.2023 |
| பிணை விடுவிப்பு | : | 26.11.2023 (Bailed by Police) |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 12.02.2026 |
| விசாரணை முடிவு | : | 10.07.2026 |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | –– |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 02.12.2023 |
| Date of Questioning | : | 18.08.2025 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | – |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும்+ | : | PW's Chief Cross |

| | | |
|---|---|---|
| குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | | PW1 12.02.2026<br>PW2 12.02.2026<br>PW3 12.02.2026<br>PW4 12.02.2026<br>PW5 11.06.2026 11.06.2026 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 23.06.2026 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| காலதாமதத்திற்கான காரணம் | : | –– |

இவ்வழக்கானது 12.02.2024–ம் தேதியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 10.07.2026–ம் தேதி விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் **திரு. ஆனந்தகுமார் உதவி வழக்குரைஞர் நிலை 2** அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. குழந்தைராஜ்** அவர்களும், ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது புகார்தாரர் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 173–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின்படி எழுந்த வழக்காகும்.

**2. குற்ற முறையீட்டின் சுருக்கம்:–**

வாதியும், எதிரியும் கணவன் மனைவி ஆவார்கள். வாதிக்கும், எதிரிக்கும் அடிக்கடி குடும்ப பிரச்சனை காரணமாக சண்டை வந்துள்ளது. இதனால் வாதி தனது குழந்தைகளுடன் அவரது அம்மா வீடான சாட்சி நசரேத் மேரி என்பவரது வீட்டில் இருந்து வந்துள்ளார். கடந்த 19.11.2023ம் தேதி இரவு எதிரி குடித்துவிட்டு வந்து வாதியை பார்த்து ஏண்டி, விதவிதமாக நைட்டி, சுடிதார் வாங்கி போட்டுகிட்டு எவன பார்க்க போறடினு சந்தேகப்பட்டு சண்டை போட்டுள்ளார். பின்பு 20.11.2023–ம் தேதி காலை 5.30 மணியளவில் வாதி சமைக்க வேண்டி காய் நறுக்கிக்கொண்டிருந்தபோது, வீட்டின் பின்பக்கமாக வந்த எதிரி வாதியுடன் சண்டை போட்டு அருகில் இருந்த களைவெட்டி புடியை எடுத்து வாதியின் தலை, வலது பக்க காது, வலது பக்க நெஞ்சு, இடது முழங்கால் ஆகிய இடங்களில் அடித்து வாதிக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியுள்ளார். எனவே, மேற்படி எதிரியின் குற்றச்செய்கையானது இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 294(b), 326 IPC–ன்கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக எதிரியின்மீது வையம்பட்டி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3. வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகளிடம் வினவல்:**

குற்ற பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பானை அனுப்பப்பட்டு, எதிரி முன்னிலையானவுடன் அவருக்கு மறக்காமல் இவ்வழக்கின் நகல்கள் அனைத்தும் குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்பு

வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரிக்கு எதிராக குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 240(1)ன் படி எதிரியின்மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு U/S. 294(b), 326IPC–ன்படி குற்றம் சாட்டப்பட்டு குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 240 பிரிவின் கீழ் அவரிடம் வினவிய போது எதிரி பொய் வழக்கு என மறுத்து கூறியதால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது

**4. விசாரணை:–**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம் :–**

(5.1) அ.சா.1. திருமதி. மரியரூபெல்லா தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரி எனது கணவர் என்றும், கடந்த 20.11.2023 அன்று எனது வீட்டில் அதிகாலை 04.30 மணியளவில் பாத்ரூமில் வழுக்கி கீழே விழுந்துவிட்டேன் என்றும், அதில் எனது இடது காலிலும், வலது கண்ணத்தின் காதிற்கு பக்கத்தில் காயம் ஏற்பட்டது என்றும், அதனால் மணப்பாறை சிந்துஜா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன் என்றும், அங்கு வந்து போலீசார் என்னிடம் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றுச்சென்றார்கள் என்றும், தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றும், அதில் என்ன எழுதப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது என்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2. திருமதி. நசரத்மேரி தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரி எனது மருமகன், அ.சா.1. எனது மகள் என்றும், சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது என்றும், சம்பவ சமயத்தில் நான் வீட்டில் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) அ.சா.3. திரு. தனராஜ் தனது சாட்சியத்தில் அ.சா.1 எனது கொழுந்தியா, ஆஜர் எதிரி அவரது கணவர் என்றும், சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது என்றும், சம்பவ சமயத்தில் நான் வீட்டில் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.4) அ.சா.4. திரு. மாணிக்கம் தனது சாட்சியத்தில் அ.சா.1 எனது தங்கை மகள், ஆஜர் எதிரி அவரது கணவர் என்றும், என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் என்றும், அந்த கையொப்பம் போலீசார் கேட்டுக்கொண்டதன் பெயரில் செய்தேன் என்றும், எதற்காக என்று எனக்கு தெரியாது என்றும், அதில் என்ன எழுதியிருந்தது பற்றி எனக்கு தெரியாது என்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.5) அ.சா.5. திரு. முருகேசன் (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் கடந்த 20.11.2023 அன்று இரவு 08.00 மணியளவில் காவல் உதவி ஆய்வாளர் குடுமிநாதன் அவர்கள் வையம்பட்டி காவல்நிலைய பொறுப்பிலிருந்தபோது மணப்பாறை சிந்துஜா மருத்துவமனையிலிருந்து கிடைக்கபெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த மரியரூபெல்லா என்பவரிடம் பெறப்பட்ட புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் வையம்பட்டி காவல்நிலைய குற்ற எண். 516/2023 u/s. 294(b),324 இதச ன்படி வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும்,

தொடர்ந்து இவ்வழக்கினை புலன் விசாரணக்கு எடுத்துக்கொண்ட அவர் சம்பவ இடமான மரியரூபெல்லா என்பவரின் வீட்டு அருகே சென்று மறுநாள் காலை 07.00 மணியளவில் சாட்சிகள் ராபர்ட் அகஸ்டின், மாணிக்கம் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகள் மற்றும் புலன் விசாரணை அடிப்படையில் எதிரி ஜார்ஜ்ஸ் டீபன்ராஜ் குற்றம் புரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரியை காரணம் கூறி கைது செய்து 26.11.2023 அன்று தக்க இருநபர் பிணையில் விடுவித்துள்ளார் என்றும், இவ்வழக்கில் காயமடைந்த மரியரூபெல்லா என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மகாலிங்கம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் காயமடைந்தவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என வழங்கிய காயச்சான்றிதழை பெற்றுள்ளார் என்றும், சாட்சிகள் மற்றும் புலன் விசாரணையின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை u/s. 294(b),324 இதச லிருந்து u/s. 294(b),326 இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார் என்றும், இவ்வாறாக புலன் விசாரணை முடித்து 02.12.2023 அன்று எதிரிக்கு எதிராக கனம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>6. குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 313 (1) (b) பிரிவின் படியான நடவடிக்கை:</u>**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றிய விஷயங்கள் குறித்து குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 313 (1) (b) பிரிவின்படி கேள்விகள் கேட்க எதிரிகள் தரப்பில் சாட்சியங்களை மறுத்து பொய்

சாட்சி என்றும், இந்த வழக்கு பற்றி வேறு ஏதாவது கூற வேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்றும், எதிரிகள் பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவியபோது சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். பின்பு எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரணை இல்லை என்று குறிப்புரை செய்ததன் பெயரில் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**7. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது எதிரியின்மீது சட்ட பிரிவுகள் 294 (b), 326 IPC–ன் கீழ் வனையப்பட்ட குற்றச் சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**8. தீர்வு:**

(8.1). பிரச்சனைக்கான தீர்வு மற்றும் காரணங்கள் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் இரண்டுமே ஒன்றுக்கொன்று பிணைந்து இருப்பதால் இரு பிரச்சனைகளும் ஒன்றாக தீர்வு காணப்படுகிறது.

(8.2) இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101ன்படி எதிரிகளுக்கு எதிரான இவ்வழக்கினை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பில் சார்ந்ததாகும். அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்க அரசு தரப்பில் அ.சா.1. முதல் அ.சா.5. வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டார்கள். தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் யாதெனில் அரசு தரப்பில் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 326 IPC–ன் கீழான குற்றங்களின் உட்கூறுகள் தகுந்த சாட்சிகளின் சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா, இல்லையா மற்றும் எதிரிகளின் மீது

சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பினால் நிரூபிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதே ஆகும்.

(8.3) அ.சா.1. வழக்கில் புகார்தாரர் ஆவார். அவரின் சாட்சியத்தினை முழுமையாக பரிசீலனை செய்து அவர் அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலுமாக பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் இவ்வழக்கின் ஆணிவேரான புகார் வாக்குமூலத்தையே மறுத்து சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி அவர்கள் சாட்சியமானது அரசு தரப்பு சான்று புகார் வாக்குமூலத்தின் நம்பக தன்மையை குறித்து நியாயமான சந்தேகங்களை எழுப்புகின்றது.

(8.4) மேலும் அ.சா.1. எதிரி குறித்தும் அவர்களின் குற்ற செய்கை குறித்தும் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. இந்திய தண்டனைச்சட்டம் பிரிவுகள் 294(b), 326 IPC–ன் கீழான எந்த ஒரு உட்கூறு குறித்தும் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. அ.சா.1. திருமதி. மரியரூபெல்லா தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரி எனது கணவர் என்றும், கடந்த 20.11.2023 அன்று எனது வீட்டில் அதிகாலை 04.30 மணியளவில் பாத்ரூமில் வழுக்கி கீழே விழுந்துவிட்டேன் என்றும், அதில் எனது இடது காலிலும், வலது கண்ணத்தின் காதிற்கு பக்கத்தில் காயம் ஏற்பட்டது என்றும், அதனால் மணப்பாறை சிந்துஜா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன் என்றும், அங்கு வந்து போலீசார் என்னிடம் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றுச்சென்றார்கள் என்றும், தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றும், அதில் என்ன எழுதப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது என்றும், போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அவரது சாட்சியமானது எதிரிக்கு எதிரான அரசு தரப்பு வழக்கினை நிலை நாட்டு வகையில் அமையவில்லை.

(8.5) அ.சா.1. நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த எதிரியை அடையாளம் காணவில்லை, அவர்கள் எதிரியின் குற்றமுறு செய்கை குறித்து அரசு தரப்பில் சொல்லப்படுகின்ற வழக்கு சம்பவம் குறித்தும் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே, அவர்களது சாட்சியும் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் அமையவில்லை. போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்று சொல்லி பிறழ் சாட்சியாக உள்ளது தெரிய வருகிறது. நம்பகத்தன்மை குறித்து நியாயமான சந்தேகங்களை எழுப்புகின்றது.

(8.6) அரசு தரப்பில் இறுதியாக திரு. ரெங்கசாமி (காவல் உதவி ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் கடந்த 20.11.2023 அன்று இரவு 08.00 மணியளவில் காவல் உதவி ஆய்வாளர் குடுமிநாதன் அவர்கள் வையம்பட்டி காவல்நிலைய பொறுப்பிலிருந்தபோது மணப்பாறை சிந்துஜா மருத்துவமனையிலிருந்து கிடைக்கபெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த மரியரூபெல்லா என்பவரிடம் பெறப்பட்ட புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் வையம்பட்டி காவல்நிலைய குற்ற எண். 516/2023 u/s. 294(b), 324 இதச ன்படி வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், தொடர்ந்து இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அவர் சம்பவ இடமான மரியரூபெல்லா என்பவரின் வீட்டு அருகே சென்று மறுநாள் காலை 07.00 மணியளவில் சாட்சிகள் ராபர்ட் அகஸ்டின், மாணிக்கம் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகள் மற்றும் புலன் விசாரணை அடிப்படையில் எதிரி ஜார்ஜ்ஸ் டீபன்ராஜ் குற்றம் புரிந்தது உண்மை

என தெரியவந்ததால் எதிரியை காரணம் கூறி கைது செய்து 26.11.2023 அன்று தக்க இருநபர் பிணையில் விடுவித்துள்ளார் என்றும், இவ்வழக்கில் காயமடைந்த மரியரூபெல்லா என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மகாலிங்கம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் காயமடைந்தவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என வழங்கிய காயச்சான்றிதழை பெற்றுள்ளார் என்றும், சாட்சிகள் மற்றும் புலன் விசாரணையின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை u/s. 294(b), 324 இதச லிருந்து u/s. 294(b), 326 இதச வாக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார் என்றும், இவ்வாறாக புலன் விசாரணை முடித்து 02.12.2023 அன்று எதிரிக்கு எதிராக கனம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி அவரது சாட்சியத்தினை ஒத்துரைக்கும் வகையில் அரசு தரப்பில் சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. இந்த வழக்கின் புகார்தாரரே புகார் வாக்குமூலத்தை மறுத்து சாட்சியமளித்து அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலுமாக பிறழ் சாட்சியாகி விட்டார். விசாரிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சிகளும் அரசு தரப்பு வழக்கிற்கு பிறழ்சாட்சியாகி விட்டார்கள். அவர்கள் அனைவரும் எதிரிக்கும், அரசு தரப்பு வழக்கத்திற்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை .

(8.7) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த சரஸ்வதி மற்றும் பல எதிர் அரசு **2002 Crl LJ 1420** என்ற தீர்ப்பின் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b)ன் கீழான குற்றத்தின் உட்கூறுகள் ஆபாச சொற்களை ஒரு நபர் பொது இடத்தில் மற்றவருக்கு எரிச்சல் ஊட்டும் வகையில் மொழிதல்வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. மேலும், அந்த தீர்ப்பில் இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 323 ன் கீழான குற்றத்தின் உட்புரிகளின் ஒருவரின் உடலுக்கு அல்லது பெயருக்கு பீதி விளைவிக்கும் உட்கருத்துடன் மிரட்டல் விடுத்து அத்தகைய

மிரட்டல் நிறைவேற்றப்படுவதை தவிர்க்கும் பொருட்டு ஒருவர் சட்டப்படி செய்ய கட்டுப்பட்டிறாத செய்கை செய்வதையும் அல்லது சட்டப்படி அவர் செய்ய உரிமை பெற்றிருக்கிற செய்கை எதனையும் செய்யாது விடுவித்தல் வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

(8.8) ஆனால் தற்போதைய அரசு தரப்பு வழக்கில் மேற்படி தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் 294(b) மற்றும் 326ன் கீழான எந்த ஒரு உட்கூரும் நிலை நாட்டப்படவில்லை. மேலும் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 326 IPC–ன் கீழான எந்த ஒரு உட்கூறுகள் அரசு தரப்பு சாட்சிகள் மூலம் நிலைநாட்டப்படவில்லை. எனவே, எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை தகுந்த சாட்சிகளின் சாட்சிகள், சான்றாவணங்கள் மூலம் நிலைநாட்ட அரசு தரப்பு தவறிவிட்டது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 326 IPC–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவர் குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 248(i)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

9. வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை. எதிரி எழுதிக் கொடுத்துள்ள பிணைய பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்துசெய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 01–ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

ASHOKUMAR R
Digitally signed by ASHOKUMAR R
Date: 2026.08.01 17:13:13 +0530

நீதித்துறை நடுவர்,
மணப்பாறை.

**இணைப்பு:**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

1. அ.சா.1 திருமதி. மரியரூபெல்லா
2. அ.சா.2 திருமதி. நசரத்மேரி
3. அ.சா.3 திரு. தனராஜ்
4. அ.சா.4 திரு. மாணிக்கம்
5. அ.சா.5 திரு. முருகேசன் (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | – | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் (திருமதி. மரியரூபெல்லா) |
| அ.சா.ஆ.2 | – | பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் (திரு. மாணிக்கம்) |
| அ.சா.ஆ.3 | – | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.4 | – | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | – | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | – | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.7 | – | விபத்து பதிவேட்டு |
| அ.சா.ஆ.8 | – | காயச்சான்று |
| அ.சா.ஆ.9 | – | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**<u>அரசு தரப்பில் சான்று பொருட்கள்</u>**: இல்லை

**<u>எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை.

ASHOKUMAR R
Digitally signed by ASHOKUMAR R
Date: 2026.08.01 17:13:18 +0530

நீதித்துறை நடுவர்,
மணப்பாறை.

<u>பின்குறிப்பு:–</u>

1) வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2) எந்த சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.